ஞானக்கும்மி

C

O-185 G
N16
179680.

உ

சிவமயம்.

# ஞானக்கும்மி.



OFFICE OF THE REGISTRAR ... MADRAS
17 JUN 1917

சென்னை-சூளை.

**பு. முனிசாமி நாயுடு**

அவர்களது,

...திவிளக்க அச்சுக்கூடத்திற்

...க்கப்பட்டது.

...916. [அணா-1.

0-,85 G
NG
179680.

உ

சிவமயம்.

# ஞானக்கும்மி

7 - JUN 1917
MADRAS.

சீர்மேவுஞானவடிவான பர
தேசிகன்சற்குருதன்னருளாற்
பாரமீதின்ஞானக்கும்மிப்பாடச் சிவ
பாலன்கணபதிகாப்பாமே. 1

அம்பிகைவாலைப்பதம்போற்றி யரு
ளானந்தக்கும்மித்தமிழ்பாட
தும்பிமுகனுக்கிளையவனாஞ் சிவ
சுப்பிரமணியனுங்காப்பாமே. 2

நாலாம்வேதமுமோராறும் வெகு
நானாபேதமுநின்றானை
மேலாய்ப்போற்றிக்கும்மிபாடச் செந்தில்
வேலவன்றன்பதங்காப்பாமே 3

தாரிலுயர்மதுராபுரியில் வாலை
சாமிசொல்லுங்கும்மிப்பாடலுக்கு
மேருவதனடிமூலமுக்கோண
விநாயகன்றன்பதங்காப்பாமே. 4

ஆதியுமந்தமுமொன்றாகி வள
ரண்டபிரண்டமுமிரண்டாகிச்
சாதிபலபலவேறாகி நின்ற
தத்துவங்கேளடி ஞானப்பெண்ணே. 5

தேகமானமலபாண்டம் அதிற்
சிற்பனம்வந்திடு முற்பனத்தை
யோகமெனுந்தமிழ்ப்பாடலுக்கு மன
முவந்துகேளடி ஞானப்பெண்ணே. 6

ஏகப்பெருவெளிபட்டணமாம் அதி
லேதோசித்தனொருவனுண்டாம்
வாசனிலைபேசவாயுமில்லை அந்த
மாப்பிள்ளைபெண்ணென்று ஞானப்பெண்ணே.

179680.

சாட்சியெனும்பிர்மாபிள்ளைக்குமூல
சத்தியென்றொரு பெண்ணாச்சு
[illegible]மகாரணமிரண்டினுக்கு நிலை
மூலநாமென்கிறாள் ஞானப்பெண்ணே. 8

ஊமையனென்றேயறிந்துகொண்டா ளந்த
வூமைபேச்செல்லா நாமென்கிறாள்
சீமையையாளத்துசங்கட்டினா ளந்தச்
சீமாட்டிதானடி ஞானப்பெண்ணே. 9

பெண்ணரசான துரத்தினமா மதைப்
பெண்ணென்ற சொல்லவுங் கேள்வியுண்டோ
மண்ணையும்விண்ணையுங் கூட்டிபயிர்செய்த
மார்க்கத்தைகேளடி ஞானப்பெண்ணே. 10

பட்டணங்கட்டிமகராசி துரை
பாங்குடன்செய்தவதிகாரச்
சட்டமுஞ்சொல்லத்தொலைபதே விதைச்
சற்றேகேளடிஞானப்பெண்ணே. 11

அஞ்ஞூறஞ்ஞூர்வகுப்பாச்சர மதி
லஞ்ஞூறஞ்சுபிரிவாச்சாம்
அஞ்ஞூறுக்கொருவித்தாச்சேமதற்
காணகுளமுண்டு ஞானப்பெண்ணே. 12

ஊரையடுத்துமலையுமுண்டா மதற்
குள்ளாயிருந்தநிலைக்காரர்
பேரையுரைக்கவினிகேளு மவர்
பெருமைதானென்னடி ஞானப்பெண்ணே. 13

[illegible]ல்மன்னாரிலிருப்பவரா மந்தச்
சட்டைப்பிள்ளைநெட்டையராம்
[illegible]ழுமானியமுமென்னதென்றா ளந்த
விசநதெரியுமோஞானப்பெண்ணே. 14

கும்பகோணத்திலேயப்புபிள்ளை யவர்
கூட்டமற்றால்வெகு வாட்டமென்று
செம்பாதிப்பங்குகேட்டுவந்தா னியாயந்
தெளிவதெப்படி ஞானப்பெண்ணே. 15

மூலக்குடிவன்னித்தேவரைவரவர்
மூர்க்கமுந்தீர்க்கமுமார்க்கமுண்டோ
நாலுகரைபங்குநாமென்கிறாரிந்த
நியாயந்தெரியுமோஞானப்பெண்ணே. 16

காத்தவராயவகண்டனுக்குத் திசை
காவலுமற்றவிசாரணையும்
பார்த்துவருவதுநாமென்கிறாரிந்தப்
படிநிலைக்குமோஞானப்பெண்ணே. 17

ஆகாயமானபரஞ்சோதியவ
ரஞ்சுக்கரைப்பங்குந்தன்னுக்குள்ளே
சேகரமாமென்றுஞ்சொல்லுகிறாரிந்த
சேதியைக்கேளடிஞானப்பெண்ணே. 18

அம்பலக்காரருமூன்றுபேராம் பின்னு
மஸ்தகநாட்டுக்கணக்கனொன்றாம்
வம்புசெய்தாலந்தமுன்னுளனுப்படி
வகைதெரியுமோஞானப்பெண்ணே 19

ஒன்பதுகூத்தரும்பங்காளியெந்த
ஆறுக்குளூர்களுமப்படியாம்
ஐம்பதுசேருவைக்காரருக்கு மவ
னண்ணனொருவனும்ஞானப்பெண்ணே. 20

சோயிற்குருக்களொருபார்ப்பான்
றெப்பகுளத்தின்மேலயவன்வீடு
தாவிக்கொண்டுதொடைதட்டுகிறானிலஞ்
சாருமோகேளடி ஞானப்பெண்ணே. 21

செட்டியொருவனும்பங்காளியதிற்
சேர்ந்தவனாகமிகவேவாங்கி
கட்டியவராகனைக்கொண்டுவந்தால காணி.
யாட்சிசெல்லுமோஞானப்பெண்ணே. 22

காரியக்காரரோவஞ்சுபேரா மவர்
காரியம்பார்க்கவீரஞ்சுபேராம்
மாரீசக்காரர்சமாதிகண்மூன்றுபேர்
வார்த்தையைக்கேளடிஞானப்பெண்ணே. 23

ஊழியக்காரரநேகருண்டா மவர்க்
கும்பளஞ்சம்பளநிரம்பவுண்டாம்
பாளையங்கோட்டைக்குச்சாரிவைத்தா லிவர்
பதுங்குவாரடிஞானப்பெண்ணே. 24

பாழூருக்கொருமேன்மணியா மவன்
பார்த்தாற்சின்னப்பயல்காணும்
வேளுநானரைப்பங்குத்தன் முதல்
விற்றுக்கொடுக்கிறான்ஞானப்பெண்ணே. 25

ஆறாறுகுடியுமுண்டா மதி
லங்கியக்குடிமுப்பத்தைந்துமுண்டாம்
ஓராறுபத்துக்குடிகளிலே யஃ
தொட்டுகுடியடி ஞானப்பெண்ணே 26

இத்தனைபேருமிருந்தாலு மதி
லிரண்டேபேர்கள்சமுசாரி
அத்தனைபேரையுந்தள்ளிவைத்தாற் பயி
ராரிடுவாரடிஞானப்பெண்ணே. 27

ஒற்றேரொற்றையெருதாகு மதி
லொன்றுபரம்முச்சாலடிக்குங்
கற்றுடன்காரணங்கண்டாயோ ஞானக்
கண்கொண்டுபாரடி ஞானப்பெண்ணே. 28

இரண்டுகரைக்குடிமானியமா மதி
லிட்டவிரையொட்டிரட்டியுண்டாம்
பண்டுபழகினமேன்புள்ளிக்காரனும்
பார்த்துப்போயினான்ஞானப்பெண்ணே 29

புள்ளிக்குறைச்சலுமவாராமன்முன்னே
போட்டபலனுங்கையாடாபற்
கொள்ளையிடச்சொல்லியோலைவந்தா லிது
கொடுமைசொல்லடிஞானப்பெண்ணே. 30

வந்தவிதியென்றிருந்தாலும் வசக்
கட்டுநிலுவையுங்கேட்கிறான்
இந்தமகிமையவனாருனே விதற்
கென்னசுகமடி ஞானப்பெண்ணே. 31

நிருநிச்சிக்கிடக்கிறபெட்டியிலே யேரித்
தண்ணீர்பாய்ச்சவுஞ்சொல்லுகிறான்
வரிகொடுக்கிறதில்லையென்றார் பூசை
மாட்டுகிறானடி ஞானப்பெண்ணே. 32

ஊரிற்குடியிருக்கவொட்டானிருந்
தாழியஞ்செய்யவும்வேலைவிட்டான்
றீரமில்லையென்றுசொன்னாலு மவன்
றெண்டகம்பிடிக்கிறான் ஞானப்பெண்ணே 33

அந்தவிருபத்தோராயிரத்திருநூற்
றுக்குலநெல்லுங்கண்டுமுதல்
வந்ததுண்டோவதின்மூன்றத்தொருபங்கு
வாரம்பிடித்தாண்டி ஞானப்பெண்ணே 34

மிச்சமிருந்தநெல்லுத்தொகையில் வாரம்
விண்ணுநோய்கொண்டபேயனுடன்
அச்சுதன்சேயனுந்தூங்கங்கோணுமா
யழித்துப்போட்டாரடி ஞானப்பெண்ணே. 35

நிலம்விளைந்துங்காணீரோ வதிற்
செலவழிந்ததும்பாரீரோ
அலமந்துதிரியாம லரு
ளானந்தஞ்சேரடி ஞானப்பெண்ணே. 36

எண்சாணீளமொருவீடா மதி
லெட்டொருபீற்றன்மைக்கூடாம்
பஞ்சாயக்காரரைந்துபேருந்தெய்வப்
பதியிதென்றார் ஞானப்பெண்ணே. 37

தேகமெனுஞ்சிவவாலயமா மதிற்
சென்னிசிறுவாயிற்கோபுரமாம்,
காகமன்விரண்டு காக்கோடுங்
கையாங்கேளடி ஞானப்பெண்ணே. 38

உண்ணாக்கென்றகொடிமரமா மதிற்
கோபுரசந்திரபுட்கரணி
அண்ணாக்கென்றவலப்புறத்திறகண்ட
தக்கினிதீர்த்தமாம்ஞானப்பெண்ணே. 99

நாற்பத்துமுக்கோணமண்டபமா மதி
நடுவிருக்குதாஞ்சிங்காரம்
பார்ப்பதுசக்கரக்கோட்டையிலே யிந்தப்
படியிருக்குதாம் ஞானப்பெண்ணே, 40

பீடமிருப்பதுமையத்திலே பலி
பீடமிருப்பதுங்கூய்யத்திலே
மாடமிருந்தசிவாலயத்தின் மணி
விளக்கிருக்குதுஞானப்பெண்ணே. 41

இப்படியானதிருக்கோவிலதற்
கெப்படிவாயலிருக்காதோ
அப்படியென்று தெறியாமற் றெறிக்
தலைகிறாரடிஞானப்பெண்ணே. 42

பூட்டைதிறப்பதுங்கையாலே மனப்
பூட்டைதிரப்பதுமெய்யாலே
வீட்டைதிறக்கமுடியாமல் விட்ட
விதியிதென்குறார்ஞானப்பெண்ணே. 43

வாசலிலேயொருமேல்வாசலந்த
வாசலிலேசிறுவாசலுண்டு
நேசமுடன்றிருவாசலிற்பூட்டு
நெருக்கம்பாரடிஞானப்பெண்ணே. 44

அக்ஷரமாமௌனாக்ஷரமா மது
வானால்நல்லதிறவுகோலாம்
மூத்திதமாகத்திறந்தாலே யந்த
வுச்சிவழிகாணும்ஞானப்பெண்ணே 45

கண்ணாலேமனகண்ணாலேயதைக்
கண்டாலேவழியுண்டாகும்
பெண்ணாசைதனையடுக்காமல் வழி
பேணிப்பாரடிஞானப்பெண்ணே. 46

பார்த்துநடப்பதுமேல்வாசலந்தப்
பாதையறிவதுமெவ்வாறு
மாத்திரைநேரம்பிரியாமற் பாதை
மார்க்கங்கேளடிஞானப்பெண்ணே. 47

எருக்கிடந்தகுழிதாண்டி யதி
விரண்டுவிறற்கடைமேற்றாண்டி
கருக்கிடைக்குமடையாள மதைக்
கண்டுகேளடிஞானப்பெண்ணே. 48

மாயனாரண்மனைகாணீரோ வன்னி
மரமிருப்பதுந்தோணீரோ
நேயமதுகடந்தப்பாலேயது
கோணப்படியடிஞானப்பெண்ணே. 49

கோணத்தினின்றுமயங்காதே சுழிக்
காற்றையடக்கிச்சிணுங்காதே
வீணுக்கலைந்துதியங்காதே தூல
வேடத்தைத்தள்ளடி ஞானப்பெண்ணே. 50

தூலத்தைவிட்டுவிடாயாகி லதிற்
சூட்சத்தைக்காணமுடியாது
பாலத்திலேறிகடந்தாக்காற் பெரும்
பாதையிதல்லவோ ஞானப்பெண்ணே. 51

பாதையானபெரும்பாதை கிட்டப்
பட்டணமுண்டொருவட்டமதாய்
நாதமுங்கீதமுங்கேட்குதடி தெய்வ
நாயகன்சந்நிதிஞானப்பெண்ணே. 52

சந்நிதியென்னடிகண்டதுண்டோ கண்டாற்
றத்துவப்பேசத்திறமுமுண்டோ
முன்னேமுப்பாழுங்கடப்பதுண்டோ வதின்
மூச்சுடருண்டடிஞானப்பெண்ணே. 53

மூச்சுடர்வட்டமேசக்கரமா மது
மூக்குநுனியதுசுழிமுனையா
மச்சுடர்வட்டத்திருந்தவனே குரு
வானந்தநந்தியாஞானப்பெண்ணே. 54

நந்தியிருந்ததுவன் னிவட்டமதி
ளுட்டம்புருவமத்தியான திட்டங்
சந்திரனுங்கதிர்சூரியனு மங்கக்
தலத்தில்நின்றனர்ஞானப்பெண்ணே. 55

நாதவிந்தல்லவோ நால்யோனி தசு
நாதவிந்தல்லோ வெழுதோற்றம்
நாதவிந்தாலுட லுமுயிருமபா
நந்தியைப்போற்றடிஞானப்பெண்ணே. 56

விந்துவிருந்ததலந்தனிலே குரு
நந்தியிருந்தார்கொலுவாகி
சிந்தைதெளிந்துமகாரம்வைத்தா லந்தச்
சீமானைக்காணலாம்ஞானப்பெண்ணே. 57

சீமான்கிட்டவடுத்தாக்கான் மேலைச்
சீமைநமக்குக்குடியாச்சு
ஆமாமென்றுகும்மிப்பாடி யரு
ளானந்தஞ்சேரடிஞானப்பெண்ணே. 58

ஆனந்தமானதலந்தானே அது
அவ்வீதமானதலந்தானே
தானந்தமானசதாசிவத்தைப் போற்றித்
தாண்டிகும்மியடியுங்கடி. 59

ஞானமாமாயிரத்தெட்டிதழ்ப்பீடம்
நாட்டமாஞ்சந்திரனார்வீடு
மோனமிருந்தயகாரமௌனத்தை
மூட்டிகும்மியடியுங்கடி. 60

குண்டலிவாசியகாரமடி பிடர்க்
கண்டமதிலேயகாரமடி
உண்டுசுழியின்மகாரம்வைத்தாற் சிவ
யோகமிதல்லவோஞானப்பெண்ணே. 61

ஓங்காரமானபிரணவத்தால் எங்கு
முயந்தசோமகலைநிறத்தாள்
ரீங்காரமானபராசத்தியை நீங்கள்
நேர்ந்துகும்மியடியுங்கடி. 62

பூரகமுப்பத்திரண்டாகு மனப்
பூரணகும்பமிரட்டியதாம்
கூறவேரேசகமெண்ணிரண்டா மந்தக்
குறிப்பறிந்துகொள்ஞானப்பெண்ணே. 63

பிங்கலையாவதிரேசகத்தை வளர்
பூரகந்தன்னிலிடத்தூதி
நங்கைநந்தியிற்கும்பிக்கவே சிவ
நாட்டமிதல்லவோஞானப்பெண்ணே. 64

அறிந்துகொள்ளுமெழுத்தோடே பௌ
ரணைமுதலமாவாசிமட்டும்
மறந்திடாமற்செய்மாத்திரையின்படி
வாசிவசமாகும்ஞானப்பெண்ணே. 65

காலாலேகனலேற்றுங்கடி சுழி
மேலேகொண்டமுதூட்டுங்கடி
மூலாதாரத்தலங்கேசரமென்று
முழங்கிக்கும்மியடியுங்கடி. 66

சார்ந்துகொள்ளடிகேசரத்தை முதற்
றன்னையறியலாந்தானைக்
கூர்ந்துமூலக்கணபதிபாதத்தைக்
கும்பிட்டுக்கொள்ளடிஞானப்பெண்ணே. 67

நவ்வெழுத்தேபிரமனாகு மதில்
நாரணன்மவ்வெழுத்தானே
சிவ்வெழுத்தேதெய்வருத்திரனு மின்னுஞ்
செப்புவன்கேளடிஞானப்பெண்ணே. 68

செப்பவேவவ்வுமகேசுரனும் வட்டஞ்
சேர்ந்தவுபசாரஞ்சதாசிவனும்
தப்பிலாவைந்தெழுத்தாலேசராசரந்
தங்கியிருந்தது ஞானப்பெண்ணே. 69

வாலையினட்சரமூன்றாகும் அதை
வாய்கொண்டுசொல்பவரார்காணும்
மேலொன்றங்கீழொன்று மத்தியமுங்கூட்டி
விரைந்துபாரடி ஞானப்பெண்ணே. 70

விரைந்துசொல்லுவன் மூன்றெழுத்தாம் சதம்
விரிந்துதானுயிருண்டாச்சு
தெரிந்துகண்டவர் தங்களுக்காவலை
தீட்சையிதல்லவோ ஞானப்பெண்ணே. 71

தீட்சையெனுஞ்சிவ சக்கரத்தின் மையந்
தேவியெழுத்தை நிறுநிறுத்திக்
காட்சியுடன்சிவ பூசைசெய்தாற் சித்தி
கைவசமாமடி ஞானப்பெண்ணே. 72

கள்ளுண்டுதள்ளுண்டு நில்லாதே யபின்
கஞ்சாவுறக்கமுங் கொள்ளாதே
உள்ளுண்டுசோமக் கலையாதிபானத்தை
யூட்டிக்கும்மி யடியுங்கடி 73

கும்மியடிப்பெண்கள் அம்பலத்தைபணரக்
கூட்டியமுதங் குடியுங்கடி
அம்மென்றமும்மென்றஞ் சொல்லாமனின்ற
அத்வீதம்பாரடி ஞானப்பெண்ணே. 74

அத்வீதமாவத்துக் காதியடி மதி
ஆயிரத்தெட்டிதழ்ப் பூசைபண்ண
முத்திதருஞ்சோமப் பாலையனுதின
மூட்டிக்கும்மி யடியுங்கடி. 75

179680

மூட்டுவதென்ன திரிகோணவட்ட
மூலத்தில்குண்டலி வாசியினால்
நாட்டுவன்பூரண நாலையுங்கட்டின
னியாயமிதல்லனோ ஞானப்பெண்ணே. 76

கட்டிகொள்விந்துவைத் தள்ளாதே சுழிக்
காற்றையடக்கிப் பொருதாதே
சுட்டிமனப்பொருதிருதேகாமச்
சோம்பலைத்தள்ளடி ஞானப்பெண்ணே. 77

சோம்பலுந்தூக்கமுமாகாதே அன்ன
சுதியுங்சோகமுங் கொள்ளாதே
சாம்பசதாசிவ நாட்டத்திலேநின்று
சார்ந்துகும்மி யடியுங்கடி. 78

கைவசமாமது சஷ்டிவித்தை ஞானக்
கற்பமும்வந்து லபிக்குமடி
தெய்வமிவரென்று சொன்னாரோ நல்ல
சித்தருமுத்தரு ஞானப்பெண்ணே. 79

யோகத்துக்காதி யுமைதீட்சை மற்ற
யோகத்துக்கெல்லா முதற்றீட்சை
போகதனைக்கைவிடலாகாதே சத்திப்
பூசையைவேண்டிக்கொள் ஞானப்பெண்ணே. ()

வேண்டிக்கொள்விந்து மூதனாதஞ் சத்தி
மேவுஞ்சிவத்துடனே பரமாம்
தாண்டிக்கொளிந்த வகையாறும் யோக
சாதகசாக்கிரம் ஞானப்பெண்ணே. 81

சாக்கிரம்விந்துக்கு மேலண்டமாமதைச்
சார்ந்திடுகிற்குண நிஷ்களந்தான்
பார்க்கினிராதாரமலத்தை அத்தைப்
பாராவிடமந்தமாம் ஞானப்பெண்ணே. 82

அந்தமடியிந்த மேலாறுங்கண்டே
ஆரறிவாரடி ஞானவழி
சிந்தைதெரிந்த பெரியோரைக்கண்டு
சேவித்துக் கும்மியடியுங்கடி 83

சேவிப்பதுந்தவ னந்தியடி யோக
மாய்நிற்பது விந்துநாதமடி
ஆவிக்கிசைந்த சதாசிவசாக்கிரம்
அவ்விடமாமடி ஞானப்பெண்ணே. 84

அவ்விட்டேயுவ்விட்டேமேற்சுழியிற் சுவடி
அங்கியைவிட்டுக் காலாலே
மவ்விட்டுநாதவிந்துட் பொருளைக்கண்டு
வாழ்த்திக் கும்மியடியுங்கடி. 85

முழக்கமென்ன பிராணாபமதை
மூட்டிச்சமாதியி லிரேசகத்தை
விளக்குமாகு மிரவிகாந்தித்தம்
வேண்டிக்கும்மி யடியுங்கடி. 86

பார்க்குஞ்சுழிமுனை காணாரேயது
மூக்குநுனி யென்றறியாரே
மார்க்கமறிந்து பெரியோரைக்கண்டு
வாழ்த்திக்கும்மி யடியுங்கடி. 87

வாழ்த்தியடிபெண்ணே சேகரத்தை வினை
மாற்றியடிபெண்ணே பூரணத்தை
தூற்றுமகாமிய சஞ்சிதத்தை
தொலைவை தொலைத்துக்கும்மியடி. 88

பாசமற்றவிடம் கேசரமாம் ஒரு
பாதியிலின்றிட யோகமுமாம்
தேசமற்றார்பிர்ம ஞானசமாதியு
நிருவிகர்பமாம் ஞானப்பெண்ணே. 89

கற்பமடியிது மெய்யாகு மற்றைக்
காமமெல்லாமிக அற்பமடி
தற்பரானந்த சதாசிவமோனத்தைச்
சார்ந்துகும்மியடியுங்கடி. 90

பாசத்தைச்சொல்லு முடலாக அந்தப்
பசுவைச்சொல்லு முயிராக
நேசத்தினிற்பது யாதுபிர்ம
நிஷ்டையென்பாரடி ஞானப்பெண்ணே. 91

தேகத்துக்காதியா மைம்பூத மற்றைச்
செவுனுக்காதியாம் விட்சேபம்
மோகத்துக்காதியா மாயையின்னு
முழுதுங்கேளடி ஞானப்பெண்ணே. 92

இண்டமுண்ட வியாகிருதற்கும்
இரணியார்ப்பன் விஷ்ணுவிக்கும்
பின்னியவிராட புருடனுக்குமின்னு
மேதுண்டுசைதன்னியம் ஞானப்பெண்ணே, 93

சைதன்னியவஸ்துவே பிரம்மடி அந்த
சாட்சிக்குமிந்தி பிம்பமடி
மெய்நின்றசுத்த வறிவானல்பிரதி
பிம்பத்தைத்தள்ளலாம் ஞானப்பெண்ணே. 94

ஆமடியிந்தப் பதந்தானே கண்டா
லாதியுமந்தமு நீதானே
நாமடிவாசிகசு திரையினுண்மிக்க
நல்லகதியடி ஞானப்பெண்ணே. 95

சாதிக்குதிரை வனுவேகஞ் சரு
தாருயிருக்கின்றான் மேலாக
வீதிக்குவீதி சாரிவைத்தாற்பரி
வேடிக்கைபார்க்கலாம் ஞானப்பெண்ணே. 96

கட்டுபடாதந்த வச்சுமட்டம் அது
காலோபன்னிரண் டாகையினல்
எட்டுகயிற்றினல் கட்டிகொண்டாலிது
மட்டுப்படுமடி ஞானப்பெண்ணே. 97

கட்டுப்படுமோ மலவாயில நடு
மையத்தின்குண்டலி வாசியினால்
எட்டையுநாலையுங் கட்டியேபோற்றிடி
லேறிநடத்தலாம் ஞானப்பெண்ணே 98

சூட்சக்குதிரை யடங்காது சுழிக்
கோட்டுக்குட் செல்லமுடியாது
மூச்சுக்காயிரங் காதவழிமிக
முந்திநடக்குதாம் ஞானப்பெண்ணே. 99

குதிரைகட்டிய லாயத்திலே மனக்
கோட்டையிலே சந்தைப்பேட்டையிலே
எதிரிதான்வந்து தட்டுகிறானதை
யேதென்றுகேளடி ஞானப்பெண்ணே. 100

காமனெவருக்கு மூத்தவனா மவன்
கற்றிடும்வித்தைகண் மெத்தவுண்டாம்
தாமதமான குரோதனும்லோபனுந்
தம்பியாங்கேளடி ஞானப்பெண்ணே. 101

மோகமதமிரண்டு பிள்ளைகளாம் ஒரு
மூர்க்கமசியக் காரனொடு
சேகரவீரவைடம்பனுஞ்சம்பனுஞ்
சினேகிதமாமடி ஞானப்பெண்ணே 102

இநேகிதனுக்கேற்ற வுரவாளிபொல்லாத
தீபவனு மோரசங்காரி
அனேகத்தைச்செய்யுமதியில்ரோஷனு
மத்தைமகனடி ஞானப்பெண்ணே 103

பெண்ணேசேனாபதின்மூன்று
பேர்களுண்டு பகையாளி
ஒன்றேயொன்று வசமானாலவ
ரொடுங்குவாரடி ஞானப்பெண்ணே. 104

ஒடுக்கமில்லை யிவராலே பல
நோட்டமில்லா மனக்கோட்டையிலே
படுகளத்துக்கு மேய்ந்துவரப் பசு
பற்றுகிறாரடி ஞானப்பெண்ணே. 105

பாம்பிருக்குது புற்றுக்குள்ளே சக
பந்தமிருக்குது நெஞ்சுக்குள்ளே
வீம்பையடக்கி யுயர்ந்தாக்காற் பரி
வேடிக்கை பாக்கலாம் ஞானப்பெண்ணே. 106

பித்துபிடித்தமனக்குரங்கு வெறிப்
பேயும்பிடித்துக் கொண்டாட்டமிட்டால்
அத்தையடக்க மருந்துசெய்தாற் பரி
யன்றுநடத்தலாம் ஞானப்பெண்ணே. 107

நடத்தலாமே மோனவாசி ஒரு
நாலைந்துபீத்தலை மூடாமல்
திடத்தினான் மனஞ் சித்தானாற்சித்தர்
தெளிந்துகொள்ளலாம் ஞானப்பெண்ணே. 108

தெளிந்தசித்தகம் பூட்டியதிற்
தேறுமறிவை யதிற்சேர்த்துக்
குளிர்ந்துஞான வைராக்கியகுறடா
கொண்டுமாட்டடி ஞானப்பெண்ணே. 109

மூலத்தெருவி லொருபாச்ச லந்த
மூச்சந்திவீதியி லோர்பாய்ச்சல்
மேலைத்தெருவிலோர்பாய்ச்சற் பரி
வேடிக்கைபார்க்கலாம் ஞானப்பெண்ணே. 110

இந்தவிதங்களரியாமன் மணி
மந்திரமென்று திரிகின்றார்
அந்தரமான வெழுத்தறிந்தால் மணி
மந்திரமல்லவோ ஞானப்பெண்ணே. 111

மௌனமந்திரங்களினாலே தங்கள்
வாய்தனைமூடித் திரிவார்கள்
புவனசாரம்புசிப்பார்க்கு மதி
போசனமாகுமோ ஞானப்பெண்ணே. 112

தாயென்றுசொல்வார் சொற்பனத்திற் காம
சன்னதம்வந்தா னினைப்பாரோ
வாய்கொண்டுவேதம் படித்தாலுஞ் சுத்த
மௌனந்தங்குமோ ஞானப்பெண்ணே. 113

தாடிவளர்த்துச் சடைவளர்த்து நல்ல
சந்நியாசியென் றொரு வேடமிட்டு
ஓடித்திரிந்த புலியாட்டை யிங்கே
யொப்புவதாடி ஞானப்பெண்ணே. 114

பேசா திருக்குமிடம்பார்த்து அதைப்
பெற்றேயிருப்பது மந்திரமாம்
ஆசானென் றுபதேசமிட்டாற் குரு
வல்லவனென்று கும்மியடியுங்கடி. 115

சொற்குருவாலே கதியாமோ பொய்யைச்
சொல்லுவார்தங்க ளுறவாமோ
சற்குருவானவரைச் சேர்ந்தவர்
தன்சொல்லைக்கேளடி ஞானப்பெண்ணே. 116

நானென்றவாணவம் பேசார்க ளல்ல
நாடென் றுங்காடென்றுஞ் சொல்வார்கள்
தானென்றி யாவையுங் கண்டாரே நல்ல
சற்குருவாமடி ஞானப்பெண்ணே. 117

குருவிருப்ப துள்ளத்திலே மன
கோணலிருப்பதுந் தன்னுக்குள்ளே
பொருளிருப்பதறியாமற் புடம்
போடுவதெப்படி ஞானப்பெண்ணே. 118

வாதஞ்செய்யவறியாமல் ரச
வாதஞ்செய்கின்றே மென்று சொல்லிச்
சூதங்கெந்திபுடத்திலிட்டா லதிற்
சொர்ணம்விளையுமோ ஞானப்பெண்ணே. 114

லிங்கமுருக்க வலைவார்கள் சாதி
லிங்கமிருப்ப தறியாமல்
வங்கமுந்தங்கமுஞ் சேர்த்துருக்கினாற்
பங்கமிதல்லவோ ஞானப்பெண்ணே. 120

பாஷாணங்குகை தன்னில்வைத்து வெள்ளைப்
பாலூட்டி குகைசமூடி
பிசாணியப்புடமிட்டாலு மதி
லிருப்பதென்னடி ஞானப்பெண்ணே. 121

காரணமானது காரியமதைக்
கட்டவறியார் முழுமூடர்
பூரணமென்றுதிரிகதாலு மதிற்
புண்ணியமுண்டாமோ ஞானப்பெண்ணே. 122

மூப்பூவென்றுதிரிவார்கள் அந்த
மூப்பூவந்த வகைகாணார்
அப்பூவென்று மறிந்தாக்காற் சித்தி
யாமென்று கும்மியடியுங்கடி 123

காரத்தைக்கட்டவறியார்கள் கடுஞ்
சாரத்தை நீற்றிணஞ்செப்பாமல்
வீரத்தைப்பூரத்தைச் சேர்த்ததினாலது
வீணல்லவோசொல்லு ஞானப்பெண்ணே. 124

கோரவித்தையை யறியாமல் லோக
வேஷத்தினின்று மலைவார்கள்
வேசபீசமறிந்தாலே வாதங்
கேசரமாமடி ஞானப்பெண்ணே 125

வாதத்திறவுகோல் காணாரே பஞ்ச
பூதச்சரக்கையுந் தோணாரே
யேதுக்குகணபுகைந தூதுகின்றாரிதை
யேதென்றுசேளடி ஞானப்பெண்ணே. 126

துருசுசுண்ணமுடிந்தாச்சு அதைச்
சோதிக்கவெட்டாரை மாற்றாச்சு
பொருளைச்சொல்லிப் பணம்பரிப்பாரிவர்
பொய்க்குருவல்லவோ ஞானப்பெண்ணே. 127

கவனகுதமுடிந்ததென்பார் ஊசிக்
காந்தத்தைக்கிண்ணமுஞ்செய்தோமென்பார்
புவனவாதைப் புரட்டாலேயவர்
பிழைக்கிறாரடி ஞானப்பெண்ணே. 128

பிழைக்கமுத்தி யறியாமற்சென்ம
பூர்வக்கியானமுந் தெறியாமற்
றழையைத்தின்று சருகாகித்
தயங்குகிறாரடி ஞானப்பெண்ணே. 119

தயங்கியென்ன பலனுமோ மனஞ்
சாதித்துநிற்கத் திறமாமோ
மயங்கிடாதேவழலை மகத்துவம்
வருவதெப்படி ஞானப்பெண்ணே. 130

உப்பையறிந்தவனேவாதி சகத்
துப்பையழிந்தவனே யோகி
தப்பிலையேபூமி நாதமகிமையைச்
சார்ந்துபாரடி ஞானப்பெண்ணே 131

வீட்டிலிருக்குதொருமூலம் வெளிக்
காட்டிலிருக்கு திருமூலம்
மாட்டிவிருக்கும் பெரியோர்க்கு ரச
வாதமிதல்லவோ ஞானப்பெண்ணே. 132

தோணுதென்றசரக்கெடுத்துக் கருஞ்
சூரசூரையில் வைத்தெடுப்பச்
காணுன்கண்டபொருள்போலேசித்தி
தானென்றுகும்மியடியுங்கடி 133

நெல்லியிருக்குது காட்டுக்குள்ளே கரு
நெல்லியிருக்குது வீட்டுக்குள்ளே
கொல்லிமலைக்குத் தரித்காலுங்குரு
கொண்டுவருவாரோ ஞானப்பெண்ணே. 134

காயாம்பட்டிகுளத்துக்குள்ளே வெள்ளை
காசாம்வேரு முளைத்திருக்கும்
வாயாற்றினின்று நிமிர்ந்தாக்காலுடல்
மாயாதல்லவோ ஞானப்பெண்ணே. 135

கற்பநிலையறிந்தென்னுமல் வெறிக்
கஞ்சாவுண்டு விருப்பார்கள்
அற்பர்குகைமலைசென்றாலும் வஸ்து
வரியலாகுமோ ஞானப்பெண்ணே. 186

கொங்கணர்சொன்ன கடைக்காண்டம் அதிற்
சங்கையறிவது பிர்மாண்டம்
எங்கள்குரு சட்டமாமுனியா
ரிருந்தும்பாரடி ஞானப்பெண்ணே. 137

நாதிஉரைத்தது மெஞ்ஞானந் திரு
மூலருணர்ந்ததுவே ஞானம்
பூரணகும்பமுனி சொன்னசூத்திரம்
பூட்டகம்பாரடி ஞானப்பெண்ணே. 138

தீட்சையின்மச்சமுனி தீட்சையவர்
செப்பினஞான மொருநாளும்
தாழ்ச்சிவாராது பெரியோரைக்கண்டு
காட்சிகேளடி ஞானப்பெண்ணே. 139

ரேசகபூரக கும்பத்தால்வாசி
நேரிட்டுசெய்யவது மாவசையடி
கேசரமாகிய வத்விதபிர்மத்தைக்
கிட்டிக்கும்மி யடியுங்கடி. 140

உப்பைவிடுவதுமாசைபடி யன்ன
மோர்பொழுதுன்ப தாசைபடி
செப்பவொண்ணாத மனோன்மணிந் தேவனைச்
சேர்ந்துகும்மியடியுங்கடி 141

வாசலிலேயொரு மேலவாச லந்த
வாசலிலேசிறு வாசலுண்டு
நேசமுடன்சிறு வாசலிற்பூட்டி
நெருக்கப்பாரடி ஞானப்பெண்ணே 142

தேசங்கள்போவது மாசையடி குல
தெய்வமுண்டென்பது மாசையடி
நேசமெம்பிர்ம ஞானசோதியை
சேர்ந்துகும்மி யடியுங்கடி. 143

சமயபேதமுமாசையடி கங்கா
ஸ்நானபூசையு மாசையடி
மமதையற்றிருக்கின்ற மமதையை
வாழ்த்திகும்மி யடிடியுங்கடி. 144

பால்கறவாப்பசு தள்ளுங்கடி பதி
பாசத்தையும்விட்டுத் தீருங்கடி
மேல்விளங்கிய தற்பரசோதியை
வேண்டிகும்மி யடியுங்கடி, 145

தத்துவகுப்பைபைத் தள்ளுங்கடி வேத
சாஸ்திரப் பொத்தலை மூடுங்கடி
முத்திதருஞான வஸ்துவைவாவென்று
கூட்டிகும்மி யடியுங்கடி. 146

ஆறாதாரமுந்தொல்லையடி யதற்
கப்பாலேயொன்று மில்லையடி
சீராய்நின்ற நிலைத்துப்பெண்கள்
சேர்ந்துகும்மி யடியுங்கடி. 147

சித்தர்சொற்படி சித்தாந்தங் கண்டு
தெளிந்துகொள்ளடி வேதாந்தம
தத்துவமாகிய வுற்பத்தி சூக்குமச்
சார்புகேளடி ஞானப்பெண்ணே 148

சார்புதானென்னடி வேதாந்தஞ் சொல்லுந்
தத்துவந்தா னிவ்வகையுடனே
காரணாதிய வஸ்துதனிலெகளின்
கணக்குறைக்கிறேன் ஞானப்பெண்ணே. 149

உரைக்குந்தத்துவ நாலேழிற்கண்
டோதுஞ்சித்துரு நாலாறும்
மறைக்குட்சொலலிய சித்துருநாலாகு
மகிமைபாரடி ஞானப்பெண்ணே. 150

மகிமையாகிய தொம்பதமா மதில்
வத்தவுபாதி யுணர்த்துகிறேன்
தகைமையென்னமுன் சொன்னவசித்திரு
தன்செயல்கேளடி ஞானப்பெண்ணே. 151

வாசன்மிகுந்த வுடம்போடு பிராண
வாயுவோடிந்திரிய மானதொன்று
காசலைபாமதி சேர்ந்துவளர்ந்த
காரணநாலடி ஞானப்பெண்ணே. 152

காரணமென்பதிவையேழும் வந்து
கலந்ததாமடி தொம்பதத்தைத்
காரணதொம்பத மானதுரியத்திற்
றன்னுடலாச்சுதா ஞானப்பெண்ணே. 153

தன்றாலமாகிய சாக்கிரத்தைத்தன
தாகவிருந்திடு மாதத்துமற்குப்
பின்சொல்வதாம்விஸ்வ னென்றபிமானப்
பேரல்லோசொல்லடி ஞானப்பெண்ணே. 154

பேர்பெறுமெந்தரமுபாதியுடன் கூடப்
பெற்றிடுஞ்சூட்சம் சொற்பனத்தின்
சார்பிலிருந்த தரியற்றுநாமமுந்
தைசதனுமடி ஞானப்பெண்ணே. 155

ஆகும்பிராணனல வாயுவுடன் கூடி
யடங்கிமூலத்துடன் சேர்ந்து
சேகாமாவந்த நாததுரியத்தை
சேர்த்திடற்காரண தேகமடி. 156

சேர்ந்தவவத்தை சுழுத்தியடி யதைச்
சேர்ந்தவனும்பிராக்ஞனாகுமடி
கூர்ந்தமூன்றையுங் கண்டதுரீயத்தைக்
கும்பிட்டுக்கும்மி யடியுங்கடி. 157

கும்பிட்டுத்தொம்பதச் சித்தார்த்தங் கண்டு
கூறியஞாய மிதுபோல
வம்பிட்டுத்தற்பத மானவிவேகத்தை
யறிச்சொல்லுவேன் ஞானப்பெண்ணே. 158

அறிவதென்னடி தொம்பதமாம் பொரு
ளானவுபாதியு மானதுபோற்
சருவதற்பர மானபொருளுக்குத்
தன்னுடல்சீவன் றுரியமடி. 159

சர்வஞ்ஞன்சருவக்காரணுஞ் சரு
வேந்திரியாமிசர்வேஸ்வரனுஞ்
சர்வசிருஷ்டிசர்வதிதிசர்வ
சங்காரனும்பேராம் ஞானப்பெண்ணே. 160

பேரானதென்ன விவையேழு மிகப்
பேசிடில்வாதம் துரியமடி
தோரவுபாதியைப் பெற்றதினுன் முத்தி
தாஷணமுண்டாச்சு ஞானப்பெண்ணே. 161

தூஷணச்சிவனிவையேழுங் கண்டு
சொல்லும்பரனுகருடலாச்சு
சாஸ்வுதமென்றதானந்தினுற்சாயா
கிரகமென்றுபேர் ஞானப்பெண்ணே, 162
சாக்கிரந்தன்னை தானென்றுசொல்லி யப்பால்
தானபிமானிதருந்தாக்காற்
சேர்க்கவிராட்டனச் சொல்லுவார்சாமங்
தெரிந்துக்கொள்ளடி ஞானப்பெண்ணே. 163
தெரிந்தமூன்றனுபாதியுமா யதிற்
சேர்ந்தபானபர சொப்பனமாம்
பிரிந்திடாதபி மானிரனிய
கற்பனென்பாரடி ஞானப்பெண்ணே, 164
பாருமிதிலொரு பாதியுடன்
பானுக்கல்லவோர் பார்சுழித்தி
சேரும்பொழுது வியாகிருதனெனச்
சிந்தையிற்காணடி ஞானப்பெண்ணே. 165
காணடிதற்பத சத்தாரத்த மிதைக்
கண்டுதெரிந்த வகைபோலே
பூணடிஞான சிவசாதத்தி
னுண்மையைக்கேளடி ஞானப்பெண்ணே. 166
உண்மையான்தற்பரதற்றுரியங் கண்டு
மூற்றுப்பாரா தொரு தோஷமதால்
தண்மைச்சிவப்பத சுத்தனுக்குப்பரன்
தன்னுடலாச்சுது ஞானப்பெண்ணே. 167
ஓதும்பரமவிஸ்வகிராசமடி யுப
சாந்தமெனும்வகை மூன்றிலொன்றைச்
சாதனைசெய்தசிவத்துக்கல்லோ பர
சாக்கிரமாகுமே ஞானப்பெண்ணே. 168
ஆகும்பொருள்சிவ சாக்கிரத்தை யபி
மானிதிருந்த சிவதுரியம
சேகரமாயிடிறசிறசொலிதையென்று
செப்பிடும்வாக்கிய ஞானப்பெண்ணே. 169
வாக்கியமாம்விஸ்வ கிராசமடி யந்த
மார்க்கமென்னசிவ சொப்பனத்தைப்

பாக்கியனபிமானிடத்திற் பிரசா
பத்தனென்றுசொல் ஞானப்பெண்ணே. 170

சொல்லுவதுமென்ன வுபசாந்தஞ் சிவ
சுழுத்திதானென் றிருந்தாக்கால்
நல்லதுபொற்புறு சாந்தனென்றா லது
நாமமதல்லவோ ஞானப்பெண்ணே 171

நாமச்சிவதுரியத்திலடி யபி
மானமிழந்து தனித்ததினால்
நேமமிதல்லவோ வாதிதுரியத்தி
னில்லைமைகண்டிலா ஞானப்பெண்ணே. 172

கண்டறிபாததுமுற்றிரிய மதைக்
கண்டுசுழன்று மௌனதடி
பண்டுபிர்மவானந்த சொரூபத்தைப்
பணிந்துகும்மி யடியுங்கடி. 173

பணிந்தஞானமதுதாண்டி பர
மானந்தமான நிதிதாண்டி
துணிந்துபாரு மானந்தசொரூபனைத்
தொழுதுகும்மி யடியுங்கடி. 174

தொழுதுகொள்ளுஞ்சுகசிவ பர
சுத்தப்பொருளு மிதுதாண்டி
வழுதிலாத சொரூபக்குருவுடைய்
பாதமிதல்லவோ ஞானப்பெண்ணே. 175

பதமாகியதொம்பதமாம் அதிற்
பாதமுந்தற்பத மானதடி
பேதவுபாதியவத்தைகளும் பல
பேர்களுமானது ஞானப்பெண்ணே. 176

பேருக்குச்சாந்த துரியமடி யதைப்
பேசுவுந்தற்பிர காசமடி
யாருக்குங்கண்டறி யாதபொருளைக்கண்
டகக்தெளிந்துகும்மி யடியுங்கடி. 177

முத்திபெறுந்தேவ தத்தனைப்போற் சக
முழுதுந்தன்மய மானதடி

179/180

நந்தியேவிட்டு விடாதேவிலக்கண
ஞாயமிதல்லவோ ஞானப்பெண்ணே. 178
ஞானமாமோட்சமிது தாண்டி மற்ற
ஞாயமெல்லா மனமாயமடி
தானசங்கற்ப விகற்பசமயமுந்
தன்மயமானது ஞானப்பெண்ணே. 179
தூரதூரமுமில்லையடி யதைச்
சொல்வதுங்கேட்பது மில்லையடி
தாரார்பிரமநிலைபார்த்துப் பெண்கள்
தாண்டிக்கும்மியடியுங்கடி. 180
அண்டமும்பிண்டமும்பாழாச்சே அறுக்
கப்பாலும் பெரும்பாழாச்சே
உண்டில்லையென்று பராபரப்பிரமத்தை
யுவந்துகும்மி யடியுங்கடி. 181
சொல்லினுங் கல்விது நில்லாதே பிர்ம
சோதியையாதியைத் தூவெளியை
வல்லதற்பிர காசமவுனத்தை
வகையறிந்துகொள் ஞானப்பெண்ணே. 182
பிருதிவியில் தூய்மை வயமாச்சே பதில்
பேதம்பலபல வுண்டாச்சே
சுருதிமுடிவைக்குருசொல்லுவா ரந்த
சூட்சந்தெரியுமோ ஞானப்பெண்ணே. 183
அறிந்துகொண்டபெரியோர்பாதங்க
ளர்ச்சனைசெய்து கும்மித்தமிழைப்
பிரிந்திடாமனுற்றெண்பத்தைந்துகண்ணி
பேசினேன் சற்குரு தாள்வாழி. 184
சற்குருபாதமிகவாழி வாலை
சாமிதமிழ்கிதந் தான்வாழி
நற்குணஞானக் கும்மித்தமிழ்கற்றவர்
ஞானநெறியே மிகவாழி. 185

ஞானக்கும்மி - முற்றிற்று.

---

சங்கநிதிவிளக்கம்பிரஸ்-சூளைபோஸ்டு-மதிராஸ்.

B4
11:321